கூடுதல் மகிளா நீதிமன்றம் (நீதித்துறை நடுவர் நிலை),

திருவாரூர்.

CC.No. 25 /2023

2024-ம் ஆண்டு மே மாதம் 22 -ம் நாள் குற்றமுறையீட்டாளர்/எதிரி தரப்பில் சாட்சி அ.சா. 5- ன் சாட்சிய வாக்குமூலம் 1969-ம் சட்டத்தின்படி குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களால் ஆணையுறுதி செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | குணசேகரன் | வயது | 60 |
| தந்தை பெயர் | சண்முகம் | ஜாதி | |
| தொழில் | கட்டிடவேலை | மதம் | |
| ஊர் | உத்திரங்குடி | தாலுக்கா | |

( எதிரிகள்1, 2 ஆஜரில் உள்ளார்கள். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் முன்னிலை)

**முதல் விசாரணை (அரசு தரப்பில்)**

நான் தற்போது உத்திரங்குடியில் வசித்து கட்டிடவேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். அ.சா. 1 யை எனக்கு தெரியாது. நீதிமன்றத்தில் என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகசரில் உள்ள 2 வது கையொப்பம் என்னுடையதுதான். நான் அந்த கையொப்பத்தை கடந்த ஒரு வருடத்திற்கு முன்பு போட்டேன். என்னுடன் கையொப்பம் செய்தது யார் என்று எனக்கு தெரியாது. போலிசார் கேட்டுக் கொண்டதற்கிணங்க எனது வீட்டிற்கு அருகில் வைத்து கையொப்பம் செய்தேன். ( **பார்வை மகசரில் உள்ள 2 வது கையொப்பம் மட்டும் அ.சா.ஆ. 2 ஆக குறியிடுசெய்யப்படுகிறது**) போலிசார் என்னை விசாரணை செய்யவில்லை.

**சாட்சி அரசு தரப்பு வழக்கை பகுதி அளவில் அனுசரிக்கவில்லை என்பதால் அரசு தரப்பு வேண்டுகோளிற்கிணங்க குறுக்கு விசாரணை செய்ய அனுமதி அளித்து அ.த.கு.வி.**

போலிசார் விசாரணையில் கடந்த 05.05.2022 ம் தேதி காலை 8 மணியளவில் நானும் சாமிநாதன் என்பவரும் எங்கள் தெருவில் நின்று கொண்டு பேசிக் கொண்டிருந்த போது 14.03.2022 ம் தேதி அ.சா 1 யை ஆஜர் எதிரிகள் தாக்கியது தொடர்பாக குடவாசல் காவல் நிலைய போலிசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு எங்கள் முன்னிலையில் பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள் என்றும், அதில் சாட்சிகளாக இருந்து கையொப்பம் செய்தோம் என்றும், கூறிவிட்டு தற்போது எதிரிகள் எனக்கு தெரிந்தவர்கள்

என்பதாலும், எனது ஊர்காரார்கள் என்பதால் உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை- இல்லை**

Typed under My dictation in Open Court read over to Witness and admitted by the witness to be correct.

Sd/-
S. Cintha, B.A.,B.L(Hons).,
Judicial Magistrate,
Additional Mahila Court,
Tiruvarur.